அதைத் தடுத்ததும் போற்றத் தக்க ஜனநாயக அம்சமாகும். அதனால்தான், நேற்றைய தினம்கூட நான் நாடாளுமன்றப் பிரச்சினைகளைப் பற்றி, இங்கு ' தக்கர் கமிஷன் ' குறித்துப் பேச எழுந்தபோது அதை நான் சுட்டிக்காட்டி, நாடாளுமன்ற சட்டமன்ற உறவுகள் சீர் கெட்டுவிடக்கூடாது என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஆனால் திரு. ரமணி அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை ஒரு அமைச்சரே இப்படிப்பட்ட முறையைக் கையாண்டிருக்கிறார் என்பதுவேதனையின்பாற்பட்ட ஒன்றாகும். அவர்தான் அப்படி நடந்துகொண்டார் என்பதற்காக அதைப்பற்றி இங்கே விவாதித்து நாமும் அவ்வாறு நடந்துகொள்வது சரியல்ல என்று நான் கருதுகிறேன். எனவே இது குறித்துத், தங்களுக்கு அதிகாரமோ, உரிமையோ இருக்குமேயானால், அந்தக் கடமையை நிறைவேற்று கின்றவகையில் நாடாளுமன்றத்தினுடைய அவைத் தலைவருக்கு இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்த குறிப்பை அனுப்பிவைக்கலாம் என்பது என்னுடைய கருத்து, அதற்கும் விதிமுறைகள் இடம் தருமேயானால்.

(ஆ) பேரவையில் அளிக்கப்பெற்ற நீக்க ஆணையை (Expunction Orders) யொட்டிச் செய்தியாளர்களுக்குப் பேரவைத் தலைவர் அளித்த விளக்கம்

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, தங்களுடைய கவனத்திற்கு ஒரு ஒழுங்குப் பிரச்சினை வாயிலாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

இது அவையினுடைய உறுப்பினர்களுடைய உரிமையை, அவையினுடைய உரிமையைப் பொறுத்ததாகும். பொதுவாக சட்டமன்றத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை பேரவையினுடைய தலைவர் அவர்கள், அவையினுடைய மரபுகளுக்கு, விதிகளுக்கு மாறானது என்று நினைத்தால் அதை நீக்குகின்ற உரிமை தங்களுக்கு இருக்கின்றது. ஆனால் இந்தச் சட்டமன்றத்தினுடைய வரலாற்றில் தொடர்ந்து அப்பழி நீக்கப்படுகின்ற பகுதிகள் எவையெவை என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் சட்டமன்றத்திற்குள்ளே அமர்ந்து பத்திரிகையாளர்களுக்கு உத்தரவு இடுவதுதான் வழக்கமாகும், மரபாகும். ஆனால் நேற்று இங்கே நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் சட்டமன்றம் முடிந்ததற்குப் பின்னால், ஒரு மணிக்குப் பின்னால் தாங்கள் தங்களுடைய அறையிலே அழைத்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்து, அங்கே அனைத்தும் நீக்கப்பட்டதாக சொல்லி, அந்தச் செய்திகள் பத்திரிகைகளிலேயும், ரேடியோவிலேயும் வந்திருக்கின்றன. அப்படி தாங்கள் பேசப்பட்ட நிகழ்ச்சிகளை ஜனநாயக மரபுகளுக்கு மாறாக ஒருதலைப்பட்சமாக ஒரு பகுதி மட்டும் பத்திரிகையிலே வருவது போலவும், எதிர்க்கட்சிகள் சொன்ன கருத்துக்கள் பத்திரிகையிலே வரக்கூடாது என்றும் உத்தரவிட்டு

அதனாலே நேற்றைய நிகழ்ச்சிகள் இருட்டடிப்புசெய்யப்பட்டிருக்கின்றன. இப்படித் தொடர்ந்தால் நாங்களும் பத்திரிகையாளர்களை வெளியிலே அழைத்து, எங்களுடைய அறையிலே வைத்து என்னவெல்லாம் நடந்தது, என்னவெல்லாம்பேசினோம் என்று சொல்லவேண்டிய நிலைமை ஏற்படும். எனவே இனிமேலாவது அவையினுடைய உரிமையை, உறுப்பினர்களுடைய உரிமையை பாதுகாக்கின்ற விதத்திலே இது போன்றவற்றை சட்டமன்றத்திலே தாங்கள் தெரிவித்தால் எங்களுக்கும் எது எல்லாம் நீக்கப்படுவை என்று தெரியும், எங்களுக்கு அபிப்பிராய பேதங்கள் இருந்தால் நாங்கள் சொல்வதற்கும் வழிவகை இருக்கும். எனவே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபை மீறாமல் அவையினுடைய உரிமையை உறுப்பினர்களுடைய உரிமையை சபாநாயகர் அவர்கள் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய இந்த நல்ல கருத்தை நான் ஏற்கிறேன். இங்கே அவையிலே எழுப்பப்பட்ட பிரச்சினைகள் குறித்து நான் இங்கே இவற்றை நீக்கவேண்டுமென்று தெளிவு படுத்தியிருக்கிறேன். ஆனால், தெளிவுபடுத்திய சிலவற்றில் தங்களுக்குச் சில விளக்கங்கள் தேவை என்று செய்தியாளர்களே நேரில் என்னைச் சந்தித்துக் கேட்டார்களே தவிர நான் யாரையும் அழைத்து இதைக் கொடுக்கவில்லை. எனவே, செய்தியாளர்கள் என்னிடத்திலே வந்து விளக்கத்திற்காகக் கேட்கிறபோது பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கமாகத் தருகிறாரே தவிர, பேரவைத் தலைவர் செய்தியாளர் கூட்டத்தைக் கூட்டவில்லை. அப்படிக் கூட்டமாட்டார், இந்த அவையிலே சொன்னது அப்படியே நிற்கும் என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இனி அடுத்த நிகழ்ச்சிக்குப் போகலாம்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, on a point of order, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசியபோது அவைத் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட விஷயங்களை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தன்னுடைய அறையிலே பத்திரிகையாளர்களை அழைத்துச் சொல்லலாமா என்று கேட்டார். அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட விஷயங்களை, அவையிலே நாங்கள் இப்படி இப்படிப் பேசினோம் என்று உறுப்பினர்கள் பேசுவது முறையாகுமா என்கிற ஒழுங்குப் பிரச்சினைக்கு தாங்கள் விளக்கம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : ஏற்கெனவே விதி இருக்கிறது. அப்படிப் பேசக்கூடாது என்பது அவர்களுக்கும் தெரியும், தங்களுக்கும் தெரியும். எனவே அதற்கு இடமே கிடையாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 மார்ச் 30]

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, நீங்கள் சில பகுதிகளை இங்கே சொல்கிறபோது, அவை எல்லாம் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று சுட்டிக்காட்டுகிறீர்கள். அதற்குப் பின்னால் இவை இவை நீக்கப்படும் என்று தங்களுடைய அறையில் வைத்து சொல்லியிருக்கிறீர்கள். அதனால்தான் நான் சொன்னேன். இது தவறான முன் உதாரணமாக அமையும். அப்படி இங்கு எது எல்லாம் எதிர்க்கட்சி சார்பில் பேசப்படுகிறதோ அவை எல்லாம் தாங்கள் அறையிலே வைத்து, அவை முடிந்ததற்கு பின்னால் நீக்கப்படுமானால் நாங்களும் அது போலே இங்கே அவையிலே என்னென்னவெல்லாம் பேசினோம் என்பதை எல்லாம் சொல்கின்ற நிலை ஏற்படும் என்பதைத் தான் இங்கே நான் சுட்டிக்காட்டினேன். அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லாமல் எல்லாவற்றையும், இங்கேயே, அவையிலேயே அறிவித்தால் பிரச்சினையே வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே நான் இது பற்றி தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன். நேற்று திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னதையே திருப்பிச் சொல்கிறேன். பேரவைத் தலைவர் தீர்ப்புச் சொன்ன பிறகு அதை மறுப்பது சரியல்ல என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பே தவறு என்று சொல்வது மரபல்ல என்று சொன்னேன். அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் கோடிட்டு வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் கோப்புகளை காண்பித்தேன்.

(இ) தக்கர் கமிஷன் அறிக்கையின் பிரதியைப் பேரவையில் வைப்பது குறித்து

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்லும்போது ஒரு கமிஷன் அறிக்கை பற்றிச் சொன்னார்கள். எனக்குத் தெரியவேண்டியது, சாதாரணமாக பாராளுமன்ற அவையில், பாராளுமன்றத்தில், பதில் சொல்லக்கூடிய ஏடுகளை வைப்பார்கள். மத்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட ஏடுகளை வைப்பார்கள். பாராளுமன்ற அதிகாரத்திற்கு உட்பட்ட ஏடுகளை அங்கே வைப்பார்கள். ஆனால், தக்கர் கமிஷன் அறிக்கையில் பொறுத்த வரையில், ஓர் இந்திய நாட்டின் பிரதமர் வைத்திருக்கிறார். ஆகவே, அதுபற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். She is not the Prime Minister for Parliament alone. She is the Prime Minister of India. So, I want a clarification.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS